## 10. தலைப்பு 10 – இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு

---

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) மற்றும் (ஆ) இல் உள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 10.4 இலிருந்து 10.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர்கள் கேட்டு விலகியதன் அடிப்படையில் அறவிடுவதற்கிருந்த நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,827 ஆக இருந்ததுடன் அது 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குரியதாகும்.

(ii) திணைக்களப்புத்தகங்களின் பிரகாரமும் திறைசேரி கணனி அறிக்கைகளின் பிரகாரமும் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளில் ரூபா 236,827 தொகையான வேறுபாடு காணப்பட்டது. நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் திணைக்களப்புத்தகங்கள் திறைசேரிப்புத்தகங்களுடன் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) தீர்க்கப்படாத முற்பணம்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத இலஞ்ச சுற்றிவளைப்புக்களுக்காக பயன்படுத்துவதற்கு வழங்கப்பட்ட முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,585,932 ஆக இருந்ததுடன் அதில் 04 வருடங்கள் முதல் 30 வருடங்கள் வரையான காலப்பகுதிக்குரிய மீதி ரூபா 5,467,922 ஆகும். அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கால இடைவெளி | வழக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
| --- | --- | --- |
| | | ரூபா |
| வருடம் 3 இற்கும் 4 இற்கும் இடையே | 44 | 868,500 |
| வருடம் 5 இற்கும் 10 இற்கும் இடையே | 88 | 4,349,825 |
| வருடம் 10 இற்கும் 20 இற்கும் இடையே | 31 | 233,320 |
| வருடம் 20 இற்கும் 30 இற்கும் இடையே | 09 | 13,850 |
| வருடம் 30 இற்கு மேல் | 08 | 2,427 |
| | 180 | 5,467,922 |

மேற்கூறப்பட்ட 180 வழக்குகளில் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சட்ட நடவடிக்கைகள் முடிவுற்ற வழக்குகளுக்குரிய முற்பணம் தீர்க்கக்கூடியதாக இருந்த போதிலும் அந்த முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 10.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்கம் மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.2 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 10.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை அமுல்படுத்துதல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 10.5 செயலாற்றல்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2,182 ஆக இருந்ததுடன் அதில் 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் மேலும் விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| முறைப்பாடுகளின் எண்ணிக்கை | | காலம் |
|---|---|---|
| 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 188 |
| 3 வருட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 170 |
| 2 வருட காலமாகவுள்ள முறைப்பாடுகள் | - | 494 |
| | | 852 |

இதன் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விசாரணையில் காணப்படுகின்ற முறைப்பாடுகளில் 39 சதவீதம் 2 வருடங்கள் முதல் 4 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பழமையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 10.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 34 | 20 | 14 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 01 | 04 |
| (iii) | இரண்டாம் நிலை | 62 | 53 | 09 |
| (iv) | ஆரம்ப நிலை | 64 | 59 | 05 |
| | மொத்தம் | 165 | 133 | 32 |

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆணைக்குழுவினால் 32 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.